2019 ஜூலை 9]

மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்வியில் பின்தங்கி இருக்கின்றது என்கிற பேச்சுக்கே மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியில் இடம் இல்லை என்பதை இங்கே நான் தெளிவுபட தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். என்னுடைய நாகப்பட்டினம் மாவட்டம், பள்ளிக் கல்வியைப் பொறுத்தவரையில், பட்டியலில் 24 இடங்களுக்குப் பின்னால் இருக்கின்றது என்பதை அறிந்து, மாவட்டத்தில் இருக்கின்ற அனைத்துப் பள்ளிகளினுடைய தலைமையாசிரியர்கள் கூட்டத்தை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் மூலமாகக் கூட்டச்சொல்லி, அங்கே கலந்து பேசி ஆய்வு செய்தபோது தெரியவந்த உண்மை என்னவென்று சொன்னால், 24 இடங்களுக்குப் பின்னால் இருக்கின்ற நாகப்பட்டினம் மாவட்டத்தை முதல் இடத்தைப் பிடித்துள்ள விருதுநகர் மாவட்டத்தோடு ஒப்பிடுகின்றபோது, அது 1.8 சதவிகித மதிப்பெண் வித்தியாசத்தில்தான் 24—வது இடத்திற்குச் சென்றுள்ளது. ஆக, 2 சதவிகித வெற்றி வாய்ப்பில்தான் இந்தப் பட்டியல் 1—லிருந்து 28 வரை இருக்கின்றதே தவிர, கல்வியில் பின்தங்கிய மாவட்டம் என்ற நிலை எந்த மாவட்டத்திலும் இல்லை என்பதையும், மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சி, பள்ளிக் கல்வியைப் பொறுத்தவரையில், மிகச் சிறப்பாகச் செயல்படுகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 66, மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. கார்த்திக், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

66—

புதிய தொழில்நுட்பப் பூங்கா

***3310—திரு. நா. கார்த்திக்:**

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சிங்காநல்லூர் தொகுதியில் புதிய தொழில்நுட்பப் பூங்கா அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

Tier–2 City ஆன கோயம்புத்தூருக்கு அருகில் சிங்காநல்லூர் தொகுதி இருப்பதன் காரணமாக ஏற்கெனவே டிட்கோ நிறுவனத்துடன் இணைந்து ஒரு மிகப் பெரிய தொழிற்பூங்கா நிறுவப்பட்டது. மொத்தமாக 9.14 இலட்சம் சதுர அடியில் நிறுவப்பட்ட 8 தளம் கொண்ட தொழிற்பூங்கா அனைத்து வசதிகளையும் உள்ளடக்கி உள்ளது. இந்தப் பூங்காவில் கிட்டத்தட்ட 12,500 பணியாளர்கள் வேலையில் அமர்த்தப்பட்டுள்ளார்கள். அதுமட்டுமல்ல, 1,200 கோடி ரூபாய்க்கு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. மேலும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் புதியதாக தொழிற்பூங்கா அமைப்பதற்கு உண்டான சாத்தியக்கூறுகளை விரைவாக ஆய்ந்து அறிந்து கருத்துகளைக் கேட்டு, அதனை நிறைவேற்ற உத்தரவிட்டுள்ளார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. கார்த்திக் அவர்கள்.

திரு. நா. கார்த்திக்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய தொழில் துறை அமைச்சர் அவர்கள் ஏற்கெனவே ஒரு தொழில்நுட்பப் பூங்கா இருப்பதாகச் சொல்லியிருக்கின்றார். என்னைப் பொறுத்தமட்டில், கோவை மாவட்டத்தில் ஏறத்தாழ 600 பெருந்தொழில் நிறுவனங்கள் மற்றும் தொழிற்சாலைகள் இருக்கின்றன. அதேபோன்று 1 இலட்சத்திற்கும் மேற்பட்ட சிறு, குறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் இருக்கின்றன. இந்தத் தொழிற்சாலைகள் மற்றும் சிறு, குறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களில் சுமார் 15 இலட்சம் தொழிலாளர்கள் பணிபுரிகின்றார்கள். இந்தத் தொழில் நிறுவனங்கள் அனைத்தும் முத்தமிழ் அறிஞர், செம்மொழிக் காவலர் தலைவர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது மானியங்கள் கொடுத்து வளர்ந்து வந்திருக்கின்ற தொழில் நிறுவனங்களாகும். அதுமட்டுமின்றி, சிங்காநல்லூர் தொகுதிக்குட்பட்ட பீளமேடு, Hope College பகுதியில் ஒரு Tidel Park–ம் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் உருவாக்கப்பட்டு, தலைவர் கலைஞர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டு, அங்கே பல்வேறு தொழில்கள் நடைபெற்று வருகின்றன. மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்

*இப்போது இந்தப் பதிலைச் சொல்லியிருக்கின்றார்கள். என்னைப் பொறுத்தமட்டில், சிங்காநல்லூர் தொகுதியில் ராணுவ தளவாட உற்பத்தி தொழில்நுட்பப் பூங்கா, மின் மற்றும் மின்னணு தொழில்நுட்பப் பூங்கா, தானியங்கி–*automobile *தொழில்நுட்பப் பூங்கா ஆகிய மூன்றையும் இணைத்து புதிய ஒருங்கிணைந்த தொழில்நுட்பப் பூங்காவாக அமைப்பதற்கு இந்த அரசு முன்வருமா, அதற்காக தொழில்முனைவோர்கள் எல்லோரையும் அழைத்துப் பேசி, அதற்குண்டான வழிமுறைகளைச் செய்வதற்கு இந்த அரசு முயற்சிக்குமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு அமர்கின்றேன்.*

முற்பகல் 10–40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே மத்திய அரசு,* Industrial Corridor*–ஐ* U.P. *மாநிலத்திற்கும் தமிழ்நாட்டிற்கும் அறிவித்திருக்கிறார்கள். அதற்கான இராணுவ தளவாட சாமான்களை உற்பத்தி செய்வதற்கு உகந்த மாநிலம் தமிழ்நாடு. குறிப்பாக, ஏற்கெனவே,* LMW *போன்ற நிறுவனங்கள் கோயம்புத்தூரில் இருக்கின்றன. மேலும், சூலூர் பகுதியிலே,* Datamatics Centre*–ல் கிட்டத்தட்ட 300 ஏக்கர் நிலம் இருக்கிறது. அந்த 300 ஏக்கர் நிலத்தை உடனடியாகக் கையகப்படுத்தி, அங்கே உடனடியாக இராணுவ தளவாட உற்பத்தி பூங்கா அமைப்பதற்கான நடவடிக்கையை அரசு மேற்கொள்ளும். அதுமட்டுமல்ல; மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 6–2–2019 அன்று மோப்பிரிபாளையம், கள்ளம்பாளையம் பகுதிகளில் கிட்டதட்ட 325 ஏக்கர் நிலத்தை வழங்கியிருக்கிறார்கள். பூமிதான* land*–ஐ அரசு* clear *செய்து வழங்கியுள்ளது. அங்கே இருக்கின்ற* industrial *நிறுவனங்கள் எல்லாம் சேர்ந்து 325 ஏக்கரில் கிட்டத்தட்ட 300 பிளாட் உருவாக்கி* CODISSIA *நிறுவனம் கையில் எடுத்திருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் இணைந்து முழுமையாகச் செயல்படுகிறார்கள். 325 ஏக்கரில் 300 பிளாட் அமைக்கப்பட்டு, 3000 தொழில் நிறுவனங்கள், கிட்டத்தட்ட ரூ.2,000 கோடியில் நிறுவ இருக்கிறார்கள். அதற்கும் இந்த அரசு உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதைக் குறிப்பிட கடமைப்பட்டுள்ளேன்.*

மேலும், இந்த அரசு சூலூர் பகுதியில் உடனடியாக 300 ஏக்கர் நிலத்தை சிப்காட்மூலம் கையகப்படுத்தி, அங்கே உறுப்பினர் சொன்னதைப்போல, இராணுவ தளவாட சாமான்கள், electrical item, மின்னணு பொருட்கள் உற்பத்தி செய்வதற்குண்டான நடவடிக்கையை மேற்கொள்ளும். மேலும், ஏற்கெனவே இருக்கின்ற TIDEL Park பக்கத்தில், கிட்டத்தட்ட 5 இலட்சம் சதுரடியில் புதிதாக ஒரு TIDEL Park, 8 தளங்களைக் கொண்ட அடுக்குமாடிக் கட்டடமாக கட்டப்படும். ஏனென்றால், இன்றைக்கு சென்னைக்கு அடுத்தபடியாக கோயம்புத்தூர் மாவட்டத்தில்தான் I.T. நிறுவனங்கள் இருக்கின்றதால், படித்த இளைஞர்கள் பணி செய்கின்ற வாய்ப்பைப் பெற்றுள்ளார்கள். அதற்கு இந்த அரசு முழு முயற்சி எடுத்து ஆவன செய்யும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. கார்த்திக்.*

திரு. நா. கார்த்திக்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நல்ல தொழில் திட்டங்களுடன், தகுதியுடனும் திறமையுடனும் அனுபவத்துடனும் வருகின்ற தொழில் முனைவோர்களுக்கு சொத்து பிணையம் இல்லை என்ற ஒரே காரணத்தைக் காட்டி, புதிய தொழில்களுக்கும், விரிவாக்கத் தொழில்களுக்கும் இதுவரை தமிழக அரசு ஒரு கடனுதவிகூட கொடுத்ததில்லை. இதனால் இத்தகைய தொழில் முனைவோருக்கு வாய்ப்பு மறுக்கப்பட்டு, கடைசிவரை பணியாட்களாகவே வாழ்ந்து வருகின்றனர். ஆகவே தகுதியுடனும், தொழில் திட்டங்களுடனும் வருகின்ற படித்த இளைஞர்களுக்கு சொத்து பிணையமின்றி புதிய தொழில்களை தொடங்குவதற்குண்டான கடனுதவியை இந்த அரசு வழங்குமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டு, அமைகின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்கு* Start–up policy *ஒன்றை அரசு மேற்கொள்ளவுள்ளது. அதை மாண்புமிகு முதலமைச்சர்*

அவர்களின் கவனத்திற்கு கொண்டுசென்றிருக்கிறோம். அதற்குண்டான high level committee ஒன்றை போட்டிருக்கிறோம். அந்த கமிட்டி Start–up policy–க்குண்டான நடவடிக்கையை எடுக்கும். தொழில்முனைவோரில் high technology and knowledge உள்ள இளைஞர்களை வரவேற்று, உபசரித்து, அதற்குண்டான ஆக்கபூர்வமான பணிகளை இந்த அரசு மேற்கொள்ளும். இந்த மோப்பிரிபாளையம், கள்ளம்பாளையம் பகுதியில் பூமிதான நிலத்திற்கு மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்தான் தொடர்ந்து வலியுறுத்தினார்கள். அதைத் தொடர்ந்து வலியுறுத்தியதால்தான் அந்த பூமிதான land exchange–ஐ செய்ய முடிந்தது. CODISSIA மூலம் திட்டம் உருவாகுவதற்கு காரணமே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரும்தான் என்பதை இங்கே நான் பெருமையோடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன். நிச்சயமாக சென்னைக்கு அடுத்தபடியாக கோவை மாநகரம்தான் industries sector–ல் second level–ல் வரக்கூடியது. Pumpset–உற்பத்தியில் முதலிடம்; National level–ல் இருக்கிற pumpset தேவைகளை 50 சதவிகிதம் நிறைவேற்றுகிற மாநகரம் கோவை மாநகரம். அதுமட்டுமல்ல; cotton yarn தேவையில் 20 சதவிகிதத்தை நிறைவேற்றுகிறார்கள். Foundry–ல் national level–ல் 20 சதவிகிதம் தேவைகளைப் பூர்த்திசெய்து நிறைவேற்றுகிற மாநகரம் கோவை மாநகரம் என்பதை குறிப்பிட விரும்புகிறேன். கோவை மாநகரிலிருந்து யார் industries தொடங்க முன் வந்தாலும் CODISSIA guide செய்துகொண்டிருக்கிறார்கள். இளைஞர்களுக்கு இந்த அரசு guidance கொடுக்கும். Start–up policy–ல் Industries–ஐ உடனே துவங்க, அதற்குண்டான சலுகைகள், மானியங்கள், grant அனைத்தும் வழங்கப்படும் என்பதை பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 67, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. சுந்தர், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*